நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 (CCIW), மதுரை.
முன்னிலை: திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்எல்பி.,
நீதித்துறை நடுவர் எண்.3, மதுரை.
2020ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 30ஆம் நாள் வியாழக்கிழமை
சி.ஆர்.எம்.பி. எண். 1117/2020

. . . . .

ஜீவா அமிர்தராஜ்
த.பெ. கணபதி . . . மனுதாரர்/எதிரி

// எதிரிடை //

அரசுக்காக: காவல் ஆய்வாளர்
மதுரை குடிமைப்பொருள் வழங்கல் குற்ற
புலனாய்வு பிரிவு காவல் நிலையம்
குற்ற எண்.84/2020
பிரிவு 6(4)of TNSC(RDCS)order 1982 r/w
7(i)(a)(ii)of EC Act 1955 . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/எதிரி குவிமுச பிரிவு 437-ன்கீழ் பிணை கோரி மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. T.தண்டபாணி அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும் இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

1. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/ எதிரி கடந்த 27.07.2020 முதல் கைது செய்யப்பட்டு திருமங்கலம் கிளைச்சிறைச்சாலையில் இருந்து வருகிறார் என்றும் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும், இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக இம்மனு விசாரணைக்கு வந்தபோது எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் வாதிடப்பட்டது.

2. அரசு தரப்பில் மனுதாரர்/எதிரி அரசு பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் புழுங்கல் அரிசியை TN-60-X-2043 என்ற பதிவு எண் கொண்ட Tempo Trux என்ற நான்கு சக்கர வாகனத்தில் தலா சுமார் 45 கிலோ எடை கொண்ட 13 வெள்ளை நிற சிப்பங்களில் சுமார் 585 கிலோ ரேசன் புழுங்கல் அரிசியை குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக எதிரி சட்டவிரோதமாக கடத்தி வந்து குற்றம் புரிந்துள்ளதாகவும் மேலும் கொரோனா வைரஸ் (உயிர்கொல்லி) பரவும் நேரத்தில் ரேசன் அட்டைதாரர்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசியை கடத்தி மக்களின் வாழ்வாதரத்தை பாதிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாகவும்,

எதிரி 2014ஆம் ஆண்டு மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தடுப்புக்காவல் ஆணை CMP.No.02/2014-ன்படி கள்ளச்சந்தை தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும், மேலும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும் எதிரி ஜாமீனில் வெளியில் சென்றால் தொடர்ந்து இது போன்ற குற்ற செயலில் ஈடுபடுவார் என்பதாலும், இதனால் அரசுக்கு அதிக இழப்பு ஏற்படும் என்பதாலும், மனுதாரர்/எதிரியை ஜாமீனில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

3. இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் அரசு தரப்பில் கூறப்பட்ட கூற்று ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் எதிரி தலா சுமார் 45 கிலோ எடை கொண்ட 13 வெள்ளை நிற சிப்பங்களில் 585 கிலோ ரேசன் புழுங்கல் அரிசியை நான்கு சக்கர வாகனத்தில் கடத்தி விற்று அதிக லாபம் சம்பாதித்துள்ளதை கருத்தில் கொண்டும், மேலும் கொரோனா வைரஸ்(உயிர்கொல்லி) பரவும் நேரத்தில் ரேசன் அட்டைதாரர்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசியை கடத்தி மக்களின் வாழ்வாதரத்தை பாதிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாலும் இதை சாதாரணமானதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. தற்பொழுது உள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு தொழில்கள் முடங்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அவர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை கடத்தி விற்று பொதுமக்களின் ஜீவாதாரத்தினை பாதிக்கும் விதமாக இக்குற்றமானது நடைபெற்றுள்ள நிலையினை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், எதிரி வெளியில் சென்றால் தொடர்ந்து இக்குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும் இதனால் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்மீது ஏற்கனவே பல வழக்குகள் உள்ள நிலையில் மனுதாரர் தொடர் குற்றவாளி என்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் இந்த பிணை மனுவை தள்ளுபடி செய்வதுதான் நீதியின் பால் உகந்தது என்று கருதி இந்த பிணை மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் 2020ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 30ஆம் நாள் அவைறிய பகரப்பட்டது.

ஒம்/- எஸ். சந்திர சேகர்

நீதித்துறை நடுவர் எண்.3
(CCIW), மதுரை.